www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi11Eco

11417

தென்காசி மாவட்டம்
முதல் திருப்புதல் தேர்வு - 2024

-----

வகுப்பு 11
பொருளியல்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

**I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.** **20×1=20**

1) எது பொருளாதார நலஇலக்கணம் சார்ந்ததல்ல?
அ) சாதாரண மனிதனைப் பற்றிப் படிப்பது
ஆ) பொருளாதாரம் செல்வம் மீது மட்டும் தனி கவனம் செலுத்துவதில்லை
இ) பொருளாதாரம் என்பது பருப்பொருள் நலம் சார்ந்த படிப்பு
ஈ) பொருளாதாரம் எண்ணற்ற விருப்பங்களையும், வரையறுக்கப்பட்ட வளங்களையும் பற்றியது.

2) இயல்பெண் பயன்பாட்டு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர்
அ) ஜே.ஆர்.ஹிக்ஸ் ஆ) ஆர்.ஜி.டி.ஆலன் இ) மார்ஷல் ஈ) ஸ்டிக்லர்

3) சமநோக்கு வளைகோட்டின் அடிப்படையானது ..........
அ) தரவரிசை ஆய்வு ஆ) இயல்பெண்ஆய்வு
இ) பண்பளவை ஆய்வு ஈ) உளவியல் ஆய்வு

4) முதன்மை உற்பத்திக் காரணிகளாவன
அ) உழைப்பு மற்றும் தொழிலமைப்பு ஆ) உழைப்பு மற்றம் மூலதனம்
இ) நிலம் மற்றும் மூலதனம் ஈ) நிலம் மற்றும் உழைப்பு

5) உற்பத்திக்காரணிகளை 5 சதவீதம் அதிகரித்தால்,வெளியீடு 5 சதவீதத்திற்கு மேல் அதிகரிப்பது எந்த விகித விளைவு விதியை சார்ந்தது.
அ) வளர்ந்து செல் விளைவு விகிதி விதி ஆ) குறைந்து செல் விளைவு விகித விதி
இ) மாறா விகித அளவு விளைவு விதி ஈ) மேற்காணும் அனைத்தும்

6) ஒரு அலகு கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு
அ) மாறும் செலவு ஆ) மாறாச் செலவு
இ) இறுதிநிலை செலவு ஈ) மொத்தச் செலவு

7) நிறுவனத்தின் சமநிலை என்பது
அ) MC = MR ஆ) MC > MR இ) MC < MR ஈ) MR = Price

8) எந்த அங்காடியில் AR மற்றும் MR சமமாகும்.
அ) இருவர் முற்றுரிமை ஆ) நிறைவு போட்டி
இ) மொத்த வருவாய் ஈ) சராசரி செலவு

9) நிலத்திற்கு உண்மையானதும் அழிக்க முடியாத சக்தியும் உள்ளது என்ற கருத்தைப் பயன்படுத்தியவர்.
அ) JS மில் ஆ) வாக்கர் இ) கிளார்க் ஈ) ரிக்கர்டோ

10) எதிர்பாராத செலவுகள் என்ற கருத்தை கீன்ஸ் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.
அ) பரிமாற்ற நோக்கம் ஆ) முன்னெச்சரிக்கை நோக்கம்
இ) ஊக நோக்கம் ஈ) தனிப்பட்ட நோக்கம்

11) காந்தியப் பொருளாதாரச் சிந்தனைகளை தொடர்ந்து வலியுறுத்தியவர் யார்?
அ) ஜவஹர்லால் நேரு ஆ) V.K.R.V. இராவ்
இ) J.C.குமரப்பா ஈ) A.K.சென்

12) பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை அமர்த்தியா சென் பெற்ற ஆண்டு
அ) 1998 ஆ) 2000 இ) 2008 ஈ) 2010

13) இரயத்வாரி முதல் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம்
அ) கேரளா ஆ) வங்காளம் இ) தமிழ்நாடு ஈ) மகாராஸ்டிரா

14) பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலம்
அ) 1992 - 1997 ஆ) 2002 - 2007 இ) 2007 - 2012 ஈ) 1997 - 2002

15) LPGக்கு எதிரான வாதம் ..........
அ) பொருளாதார வளர்ச்சி
ஆ) அதிக முதலீடு
இ) மக்கள் மற்றும் மண்டலங்களிடையே ஏற்றத்தாழ்வு
ஈ) நவீன மயமாக்கல்

16) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி சட்டம் .......... அமலபடுத்தப்பட்டது.
அ) 2017 ஜூலை 1ம் தேதி ஆ) 2016 ஜூலை 1ம் தேதி
இ) 2017 ஜனவரி 1ம் தேதி ஈ) 2016 ஜனவரி 1ம் தேதி

17) தேவைக்கு அதிகமாக வேலையில் ஈடுபடும் மக்களின் நிலைமை
அ) வேலையின்மை ஆ) மறைமுக வேலையின்மை
இ) முழுவேலை ஈ) சுயவேலை

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


18) எந்த யூனியன் பிரதேசத்தில் பாலின விகிதம் அதிகமாகவுள்ளது
அ) சண்டிகர் ஆ) பாண்டிச்சேரி
இ) இலட்சத்தீவு ஈ) அந்தமான் நிக்கோபார் தீவுகள்

19) தென்னக இரயில்வேயின் தலைமையிடம்
அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்

20) சாராத மாறியின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் காரணமாக சார்ந்த மாறியின் மதிப்பில் ஏற்படும் கூடுதல் முறை மாற்றம் .............. எனப்படும்.
அ) சாய்வு விகிதம் ஆ) வெட்டு இ) மாறுபாடு ஈ) மாறிலி

**II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (கட்டாய வினா எண்: 30) 7×2=14**

21) நுண்பொருளியல் என்றால் என்ன?
22) நுகர்வோர் நடத்தையின் அடிப்படை அணுகுமுறைகளை குறிப்பிடுக.
23) காரணியின் இறுதிநிலை உற்பத்தியை வரையறு.
24) செலவுச் சார்பை வரையறு.
25) தொழில்நுட்பத் தெரிவு பற்றி சென் கூறுவது என்ன?
26) பசுமைப்புரட்சியின் பலவீனங்களைப் பட்டியலிடுக.
27) நிதிச் சமநிலையின்மையைக் கட்டுப்படுத்த 1991-92ல் ஏற்படுத்தப்பட்ட கொள்கை முயற்சிகள் மூன்றினைக் கூறுக.
28) குறுங்கடன் (Micro Finance) என்றால் என்ன?
29) MS Word ன் முக்கிய அம்சங்கள் யாவை?
30) வாங்குவோர் முற்றுரிமை என்றால் என்ன?

**III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (கட்டாய வினா எண்: 40) 7×3=21**

31) பொருளியலைப் பற்றிய பற்றாக்குறை இலக்கணத்தை விளக்குக. மேலும் அதனை மதிப்பீடு செய்க.
32) தேவை விரிவு மற்றும் சுருக்கத்தை வேறுபடுத்துக.
33) வெளியுறு செலவு - உள்ளுறு செலவு வேறுபடுத்துக.
34) புத்தாக்க இலாபக்கோட்பாட்டை சுருக்கமாக கூறுக.
35) பெருக்கி கருத்தைப் பற்றி V.K.R.V ராவ் பங்களிப்பு எழுதுக.
36) PQLI என்றால் என்ன?
37) உலக மயமாக்கல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விவரி.
38) மண்டல ஊரக வங்கி பற்றி குறிப்பு வரைக.
39) ஒரு நிறுவனத்தின் மொத்தச் செலவுச் சார்பு $TC = 5 + x^2$ ஆகும். $x = 10$ என்ற அளவில் மொத்தச் செலவினைக் காண்.
40) நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக.

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 7×5=35**

41) அ) பொருளியலின் தன்மை மற்றும் எல்லையை விவரி.
(அல்லது)
ஆ) சமஇறுதிநிலை பயன்பாட்டு விதியை விளக்குக.

42) அ) தேவை விதியை வரைபடத்துடன் விவரி.
(அல்லது)
ஆ) அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரி.

43) அ) முற்றுரிமை போட்டியில் விலை AR மற்றும் MR உற்பத்தி அளவைத் தீர்மானிப்பதை வரைபடத்துடன் விளக்குக.
(அல்லது)
ஆ) பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.

44) அ) கடன்நிதி வட்டிக்கோட்பாட்டை விளக்குக.
(அல்லது)
ஆ) இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி.

45) அ) வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரி.
(அல்லது)
ஆ) 2015-2020 ம் ஆண்டிற்கான ஏற்றுமதி - இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.

46) அ) ஊரகக்கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.
(அல்லது)
ஆ) தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி.

47) அ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக.
(அல்லது)
ஆ) $Pd = 1600 - x^2$, $Ps = 2x^2 + 400$ ஆகியவை தேவை மற்றும் அளிப்பு சமன்பாடு எனில் சமநிலைப் புள்ளியில் நுகர்வோர் உபரி மற்றும் உற்பத்தியாளர் உபரி மதிப்பு காண்க.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com